பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 30 செவ்வாய்க்கிழமை 17.10.2023 கதிர் 340

## மேய்ச்சல் நில பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு இன்றேல் மேலும் வீரியமான போராட்டம்

### சாணக்கியன் எம்.பி. அறிவிப்பு

மயிலத்தமடு, மாதவனைபண்ணையாளர் பிரச்சினைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததைப்போன்றுஇன்னும் ஓரிரு வாரங்களில் உரியவாறான தீர்வு வழங்கப்படாவிடின், எமது போராட்ட வடிவத்தை மாற்றி மேலும் வீரியத்துடன் போராடத் திட்டமிட்டிருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்புப் பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் நிலங்கள் பெரும்பான்மையின சிங்களவர்களின் குடியேற்றங்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறும் வலியுறுத்தி கடந்த சில மாதங்களாக அப்பகுதியில் தொடர் போராட்டத்தைமுன்னெடுத்துவருகின்றனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் கலந்து கொண்டு,போராட்டத்தில் ஈடுபட்டுவரும்பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்திக்கூறியிருந்தேன். அச்சந்திப்பில் பங்கேற்றிருந்தபொலிஸ்மற்றும் இராணுவ அதிகாரிகள் இவ்விவகாரம் தொடர்பில் செயற்திட்ட விளக்கமொன்றை ☞ 2

## சாகர மற்றும் திஸ்ஸ மீது ஜே.வி.பி. தலைவர் வழக்கு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகியோருக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர திஸாநாயக்க அவதூறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு ஒக்டோபர்13விசாரணைக்குஎடுக்கப்பட்டபோது அனுர திஸாநாயக்க சார்பில் சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும, துவினி கொடகம மற்றும் தெரிஷா வேதாராச்சி ஆகியோர் மன்றில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியன அடுத்த ஆண்டில் நடத்தப்படவேண்டியிருக்கின்றன. தேர்தல் சீர்திருத்தச் சட்ட வரைவு ஊடாக இந்தத் தேர்தல்களை ரணில் விக்கிரமசிங்க தடுத்து நிறுத்திவிடுவார் என்கிற எதிர்பார்ப்பு, சலசலப்பு, எதிர்வுகூறல்கள் ஒருபுறம் இருக்க, ஒருவேளை தேர்தல் நடந்தால் என்ன செய்வது என்கிற எதிர்பார்ப்பில் கட்சிகள் அதற்குத் தயாராகி வருவதும் தொடர்கின்றது.

ஜனாதிபதிக்கான போட்டியில் ஏற்கனவே இரண்டு கட்சிகள் தங்கள் வேட்பாளர்களைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டன. ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே தமது தலைவர் சஜித் பிரேமதாஸவே அந்தப் பதவிக்குப் போட்டியிடுவார் என்று அறிவித்துள்ளது. அதேபோன்று தமது தலைவர் அனுரகுமார திஸநாயக்கவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் ☞ 2

## அடுத்த ஆண்டு நிச்சயமாக ஜனாதிபதி தேர்தல் நடக்கும்

### மகிந்த நம்பிக்கை

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு நிச்சயம் நடக்கும் என்றும் அதில் தனது தலைமையில் பொது ஜன பெரமுன போட்டியிடும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீனம்மோதல்தொடர்பில் கொழும்பில் உள்ள பலஸ்தீனத்துக்கான தூதுவரை நேற்றையதினம் நேரில் சந்தித்து பேசிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கேள்வி : ☞ 2

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் குறித்த

## விசாரணையின் குறைபாடுகள் பற்றி பாப்பரசரிடம் ஆயர்கள் முறையிடுவர்

வத்திக்கானில் இந்த வாரம் நடைபெறவுள்ள உலக ஆயர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் தலைமையில் செல்லும் இலங்கை ஆயர்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பில் பாப்பரசரிடம் நேரில் முறையிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கர்தினால் மால்கம் ரஞ்சித் மற்றும் நாட்டிலுள்ள அனைத்துஆயர்களும்இந்த மாநாட்டுக்காக இந்த வாரம் வத்திக்கான் செல்கின்றனர்.

பாப்பரசர் தலைமையில் வத்திக்கானில் நடைபெறும் ஆட்லிமினாவிசிட்ஆயர்கள் மாநாட்டில் அவர்கள் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டில் உலகின் அனைத்து ஆயர்களும் பங்கேற்க உள்ளார்கள்.

அனைத்து நாடுகளின் ஆயர்களுக்கும் தனித்தனியாக ☞ 2

## மீண்டும் கியூ.ஆர். அமுலுக்கு வராது

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக இலங்கையில் மீண்டும்எரிபொருள்விநியோகத்திற்கான கியூ.ஆர். முறை அறிமுகப்படுத்தப்படாது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்றுத் தெரிவித்தார்.

கியூ.ஆர். முறையை மீளக் கொண்டுவருவது தொடர்பில் தற்போதைய ஆட்சி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்ஆகியன எவ்வித கலந்துரையாடலையும் ☞ 2

# மக்களை விரட்டி அபகரித்த நிலத்தை வைத்து ஆடம்பர வாழ்வுக்கு அரசு தொடர்ந்து முயற்சி

### எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யப்படும் என்கிறார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்.)

கீரிமலையில் மக்களை விரட்டியும், ஆலயங்களை இடித்தும் அபகரித்த நிலங்களில் அமைத்த உல்லாச விடுதிகளை வழங்கியே அரசு தொடர்ந்தும் ஆடம்பரமாக வாழ முறபடுகிறது என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆட்சியாளர்களின் இந்த முயற்சியைஎதிர்த்துநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கீரிமலையில் இருந்து 1990ஆம் ஆண்டு ஆயுத முனையில் மக்களை விரட்டி அபகரித்த நிலங்களை விடுவிக்குமாறு மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை முன் வைத்துவரும் நிலையில் இன்று நாளை என காலங்கடத்தப்பட்டு வந்தமை உலகமறிந்த விடயம்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்வாறு மக்கள் நிலங்களை ஆக்கிரமித்து மகிந்த காலத்தில் அமைத்த ஜனாதிபதி மாளிகை அடங்கிய பிரதேசம் 28 ஏக்கர் காணப்பட்டாலும் அதில் 17 ஏக்கரிலேயே கட்டடங்கள் காணப்படுவதாகவும் கூறப்பட்டது. அந்த 17 ஏக்கரையும் தவிர்ந்த மீதி 11 ஏக்கரையும்உடன்விடுவிக்குமாறும் 17 ஏக்கர தொடர்பில் நிலத்தின் உரிமையாளர்கள் மத ☞ 2

## இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் இலங்கை யார் பக்கமும் இல்லை

### சண்டையை நிறுத்த வேண்டும் என்பதே நிலைப்பாடு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் குழுவினருக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல்களால் உலக பொருளாதாரம் நிச்சயமற்ற நிலைக்கு தள்ளப்படும் அபாயம் இருக்கிறது என தொழில் மற் றும் வெளிநாட்டு வேலைவய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரஷ்யா மற்றும் உக்ரைன் மோதல், இஸ்ரேல்மற்றும்ஹமாஸ் மோதல்காரணமாகஉலக பொருளாதாரத்துக்கு என்ன நடக்கும் என்ற நச்சயமற்ற நிலை உலக நாடுகளுக்குள்ளேயே இருந்து வருகிறது.

இவ்வாறான நிலையில் பொருளாதாரீதியில்வீழச்சியடைந்திருக்கும்நாம்சவால்மிக்க பல விடயங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். இவ்வாறான நிலையில்ஆட்சியாளர்கள் என்றவகையில்நாங்கள் இந்த மோதல்களின் போது எந்தப் பக்கமும் இல்லாமல் மோதலை நிறுத்தி சமாதானப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் குழுவினருக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதலை சிலர் இனவாதமாக எடுத்துக்கொண்டு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர்.

இந்த மோதலால் ஏற்படுகின்ற உலக பொருளாதார ☞ 2

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் ஊடகங்களை வலுப்படுத்தும்

### ஐ.தே.க. தவிசாளரின் விளக்கம் இது

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதற்கூடான கண்காணிப்பு முறை, ஊடகங்களை வலுப்படுத்துமே தவிர ஊடகங்களைக் கட்டுப்படுத்தாது என்பதை அனைத்து ஊடகவியலாளர்களும் மற்றும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். சரியான தகவல்களை வழங்குவது முழு நாட்டிற்கும் பயனுள்ள செயலாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனதெரிவித்தார்

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்சந்திப்பில்கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒன்லைன் முறைகளின் பாதுகாப்பு தொடர்பானஆணைக்குழுவின் நியமனத்தின் ஊடாக, ஆய்வு ரீதியிலான ஊடகவியலாளரும் அதேபோன்றுஆராய்ந்து பார்க்கக்கூடியபிரஜையும் உருவாக்கப்படுவர்

இணையத்தளத்தின் ஊடாக அவதூறான மற்றும் பொய்யான தகவல்களை வழங்குபவர்கள் நீதித்துறை மூலமேதண்டிக்கப்படும் அதேவேளை, ஆணைக் குழுவுக்கு தண்டனை வழங்கும் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்றுஜே.வி.பியும்அறிவித்துள்ளது. இவர்கள் இருவரும் இரண்டாவது தடவையாக இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

மறுபுறத்தில் மொட்டுக் கட்சி எனப்படும் பொது ஜன பெரமுன சார்பில் மூன்றெழுத்துக் கொண்ட ஒருவர் போட்டியிடுவார் என்று சொல்லப்பட்டது. இது, ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து பஸில், நாமல், சமல் ஆகியோரில் ஒருவர் போட்டியிடக்கூடும் என்கிற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. ஆனால், இவர்களை எல்லாம் தவிர்த்துவிட்டு பிரபல வர்த்தகரான தம்மிக்கப் பெரேராவே மொட்டு சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கடந்த சில வாரங்களாக பஸிலுக்கும் தம்மிக்க பெரேராவுக்கும் இடையில் அடிக்கடி சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இதைத் தொடர்ந்து, தனக்கு 50 சதவீத ஆதரவு கிடைத்தால் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று தம்மிக்கப்பெரேரா பகிரங்கமாகவே தெரிவித்தார்.

இதுவரைக்குமான தகவல்களின்படி அவரே மொட்டின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகித்த காலத்திலும் இவரை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கி அமைச்சுப் பதவியும் கொடுத்திருந்தார்.

நாடு இன்னமும் பொருளாதார மீட்சியை அடையாத, நெருக்கடி நிலையிலேயே இருக்கும்போது ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் ஒருவரைக்களமிறக்காமல்விடுவதே சிறந்தது என்ற எண்ணம் மொட்டின் தலைமைக்குள் ஓடுவதாகக் கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட நிலையில் தமது நம்பிக்கைக்குரிய ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்த முடிந்தால் நல்லது என்று ராஜபக்ஷக்கள் நம்புகின்றனர். அதன் விளைவே தம்மிக்கவை ஜனாதிபதிப் போட்டியில் களமிறக்கும் முடிவு என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், மொட்டினதும் கோட்டாபய ராஜபக்ஷவினதும் நெருங்கிய நண்பரும் அரசியல் கட்சி ஒன்றை வாங்கி அதன் தலைவராகி இருப்பவருமான திலித் ஜயவீரவையும் இந்தக் கூட்டணிக்குள் இழுத்துவிடுவதற்கும் முயற்சிகள் நடக்கின்றன. தம்மிக்க, திலித் ஆகிய இரு பெரும் வர்த்தகர்களுக்கும் இடையே இது தொடர்பில் ஓர் புரிந்துணர்வுக்கு முயற்சிக்கப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இருவரில் ஒருவர் ஜனாதிபதியாகவும் மற்றையவர் பிரதமராகவும் பதவிகளைப் பங்கிட்டுக்கொள்வது என்கிற கொள்கை உடன்பாட்டிற்கு இருவரும் வந்துள்ளதாகவும் கூ-டக் கூறப்படுகின்றது.

தேர்தல் நடந்தால் இவையெல்லாம் உண்மையாவதற்கான வாய்ப்புக்கள் கிட்டக்கூடும். தேர்தல் நடக்குமா என்றால், அது ரணிலுக்கு மட்டுமே வெளிச்சம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளங்களின் தர்மகத்தாக்களின் விருப்பத்தை அறியுமாறு பலதடவைகள் அரசுக்கு கூறப்பட்டது.

இந்தக் காணிகளை அரசு சுவீகரிக்க முற்பட்டபோதெல்லாம் எதிர்ப்புத தெரிவித்து வந்தோம். ஆனால் 38ஏ சட்டப் பிரிவின் கீழ் பிரதேச செயலாளரால் இந்தக் காணிகள் சுவாகரிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க, நகர அபிவிருத்தி அதிகார சபை ஓர் முதலீட்டு நிறுவனத்திற்கு இதனைக் குத்தகைக்கு வழங்க ஒப்பந்தம் இடப்படுகின்றது.

இவ்வாறு இந்தக் காணிகளைச் சட்ட விரோதமாக வழங்கும் ஆட்சியாளர்களின் முயற்சிக்கு எதிராக எமது மக்கள் மற்றும் ஆலய சபைகளின் கோரிக்கையின பெயரில் நீதிமன்றின் ஊடகத் தடை உத்தரவைப் பெறவே முயற்சிக்கின்றோம். இவ்வாறு அரசின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டு ஒப.பந்தம் எழுதும் நிறுவனங்கள் பெருந்தொகை பணத்தையும் இழக்க நேரிடுகின்றபோது அதற்கு நாம் பொறுப்பாளகள் அல்லர் என்பதனையும் இந்த முதலீட்டாளர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலத்தின் உரிமையாளர்களில் மூவர் இதுவரை எம்மை நாடி வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளனர். எனவே அவர்களின் கண்ணீரில் நின்று இலாபம ஈட்ட எவரும் முயற்சிக்க வேண்டாம் என்றார்.

## மீண்டும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போது நிலவும் இராணுவ நிலைமை காரணமாக எரிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்த தேசிய எரிபொருள் உரிமம் அல்லது கியூ.ஆர். முறைமையை மீண்டும் கொண்டுவர ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றனர் எனச் சில சமூக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## மேய்ச்சல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தனர். அது அப்பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறியிருப்போரை நியாயப்படுத்தும் விதத்திலேயே அமைந்திருந்தது.

அதேபோன்று ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருந்தாலும்கூட, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் என்போர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ மற்றும் பொதுஜன பெரமுன சார்ந்தோராக இருப்பதனால், ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்படும் பாதுகாப்புசார் உத்தரவுகள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதிலும் சந்தேகம் நிலவுகிறது.

அதுமாத்திரமன்றி மயிலத்தமடு, மாதவனை பிரதேசத்தில் எத்தனை பேர் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள் என்ற ஜனாதிபதியின் கேள்விக்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் 'சுமார் 40 குடும்பங்கள்' என்று பதிலளித்தார். அதனையடுத்து "அங்கு சுமார் 300 பேர்வரை குடியேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றதே? அவ்வாறெனில் ஒரு குடும்பத்தில் 10 - 15 பேர் இருக்கின்றார்களா?" என ஜனாதிபதி மீண்டும் கேள்வி எழுப்பினார்.

எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் அச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்த அதிகாரிகளில் பலர் பொய்யான விடயங்களையே கூறினார்கள். இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி கூறினாலும், தீர்வு கிடைக்கும் வரை தாம் அதனை நம்பப்போவதில்லை.

எதிர்வரும் வாரம் வரை பொறுத்திருப்போம், அதற்குள் பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிடின் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்ட வடிவத்தை மாற்றி, மேலும் வீரியத்துடன் அதனை முன்னெடுப்போம் - என்றார்.

## இஸ்ரேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்பால் இலங்கைக்கும் அதன் தாக்கம் ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே சிலர் இருக்கின்றனர். இதன் மூலம் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றே நினைக்கின்றனர். அரசியல் அறிவீனமே இதற்குக் காரணமாகும்.

இஸ்ரேல் ஹமாஸ் மோதலால் எரிபொருளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை அறிந்துகொண்டு. தேவையான எரிபொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்குமாறு ஜனாதிபதி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்குத் தெரிவித்திருக்கிறார்.

அதேபோன்று இந்த மோதலில் நாங்கள் யார் பக்கமும் சாராமல் எப்படியாவது இதனை சமாதானப்படுத்தி முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே இருக்கிறோம்.

மோதல் தொடர்ந்தால் அதன் பாதிப்பு உலக பொருளாதாரத்துக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும். அதனால்தான் ஜனாதிபதி வல்லரசு நாடுகளின் தலைவர்களுக்கு இந்த மோதலை விரைவாக முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இஸ்ரேலில் எமது நாட்டைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர்வரை இருக்கின்றனர். அதேபோன்று காசாவில் சில குடும்பங்கள் இருக்கின்றன. அதனால் அந்த மக்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவர்கள் நாட்டுக்கு வர விரும்பினால், அதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் நாங்கள் செய்திருக்கிறோம் என்றார்.

# தேர்தல்களைப் பிற்போடும் ரணிலின் முயற்சிக்கு மேற்குலகு ஆதரவளிக்கும்

### விமல் வீவரன்ஸ தெரிவிப்பு

தேர்தல்களை பிற்போடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளிற்கு மேற்குலகம் ஆதரவளிக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் ஒன்பது - மறைக்கப்பட்ட கதை என்ற நூலின் ஆங்கில மற்றும் ரஷ்ய மொழிபெயர்ப்பு பதிப்புக்களை வெளியிட்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களை காணாமல் ஆக்கியுள்ளார், ஜனாதிபதி தேர்தல்கள் நாடாளுமன்ற தேர்தல்களிற்கும் அதனைச் செய்வது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருக்கு முடியாத விடயமல்ல.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கும் மேற்குலக நாடுகள், நாடாளுமன்ற தேர்தல்களை பிற்போடும் ஜனாதிபதியின் முயற்சிகளிற்கு ஆதரவளிக்கும். மேற்குலக நாடுகளின் ஒட்டுமொத்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இது காணப்படும்.

தேசிய தேர்தல்களை பிற்போடுவதற்கு ஏற்ற விதத்தில் வன்முறையான சூழல் ஒன்று உருவாக்கப்படலாம். மேற்குலகம் அதற்கு உதவலாம். வாக்காளர்களை தன்னால் கவரமுடியாது என்பதால் தேர்தல்களை பிற்போடுவதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

கோட்டாபய ராஜபக் ஷ பதவி விலகிய பின்னர் சபாநாயகரை ஜனாதிபதியாக்க அமெரிக்க தூதுவர் முன்வந்தார் என்ற எனது குற்றச்சாட்டை சபாநாயகர் இன்னமும் மறுக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வெளிநாட்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் அதனை ஏற்றுக் கொண்டுள்ளா. இந்த நூலின் சிங்களப்பதிப்பின் வெளியீடு ஏப்பிரல் 25ஆம் திகதி நடைபெற்றது. அன்று நான் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இன்னமும் யாரும் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதியின் ஏதேச்சதிகார நடவடிக்கைகளை எதிர்கொள்வது குறித்து நேர்மையான எதிர்கட்சிகள் பொது உடன்பாட்டிற்கு வராவிட்டால் நாடு மீளமுடியாத பலவீனமான பின்னடைவை சந்திக்க நேரிடும்.

# ஐ.தே.கவுக்கு புதிய யாப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் விசேட வருடாந்த பொதுக்கூட்டம் ஒக்டோபர் 21 கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதுசம்பந்தமாக கட்சியின் செயலாளர் தெரிவித்ததாவது:

கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறும் இச்சம்மேளனத்தில் கட்சிக்கு புதிய யாப்பொன்றை அறிமுகப்படுத்த இருக்கிறோம். இது, நாட்டில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் கோரப்பட்ட மாற்றத்தின் தொடக்கமாக இருக்கும்.

அத்துடன் நாடு செல்லும் போக்கை மாற்ற வேண்டும் என மக்கள் போராட்டத்தின் போது தொடர்ந்து தெரிவித்து வந்திருந்தது. நாட்டில் இருக்கும் அரசியல் கட்சிகளுக்கே இதனை தெரிவித்திருந்தது.

அந்த மாற்றத்தை செய்ய வேண்டி இருப்பது நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் அரசியல் கட்சியாகும். என்றாலும் அந்த மாற்றத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசிய கட்சி தயாராக இருக்கிறது.

அதன் பிரகாரம் ஐக்கிய தேசிய கட்சி நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப 2048ஆம் ஆண்டில் நாட்டை முன்னுக்கு கொண்டு செல்லும்போது அதற்குப் பொருத்தமான வகையிலேயே கட்சிக்கு புதிய யாப்பு ஒன்றையும் அறிமுகப்படுத்த இருக்கிறோம். அத்துடன் வறுமையற்ற நாடாக மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதற்கான வேலைத்திட்டகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றார்.

## சாகர மற்றும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பட்டிருந்தனர். எந்தவொரு அடிப்படையும் இன்றி துவேசம் மற்றும் அவதூறுடன் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலங்களில் உள்ள உண்மைகளை ஆராயாமல் வெளியிட்டதற்காக ஒரு ஊடக அமைப்பு மீதும் அதே மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்படுகிறதே?

பதில்: அரசிசமைப்பின் பிரகாரம் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் இடம்பெறும்.

கேள்வி: புதிய அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளமை பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்: - தேர்தல் ஒன்று இடம்பெறும் காலத்தில் புதிதாக அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவது இயல்பானதே. ஆனால் தேர்தலில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கு இடையில்தான் போட்டி இருக்கும்.

கேள்வி: பொதுஜன பெரமுன தேர்தலுக்கு தயாரா?

பதில்: நாங்கள் தேர்தலுக்கு என்றும் தயாராக உள்ளோம். வெகுவிரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்கான நகர்வுகளை தற்போது முன்னெடுத்துள்ளோம்.

கேள்வி: எவரது தலைமைத்துவத்துடன் பொதுஜன பெரமுன தேர்தலில் போட்டியிடும்?

பதில்: எனது தலைமைத்துவத்துடன் பொதுஜன பெரமுன பலமான முறையில் எதிர்வரும் தேசிய தேர்தல்களில் போட்டியிடும்.

கேள்வி:- பொது ஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டுகின்றனரே?

பதில்: மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டுவது ஒன்றும் புதிய விடயமல்ல, அவர்களின் குற்றச்சாட்டுக்கு முரணாகவே வாக்குகள் காணப்படுகின்றன. ஆகவே அவர்களின் குற்றச்சாட்டுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டிய தேவையில்லை - என்றார்.

## விசாரணையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாப்பரசருடன் கலந்துரையாட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆயர்களுக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவர்கள், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் மற்றும் அதன் விசாரணைகளில் காணப்படும் குறைபாடுகள் குறித்து பாப்பரசரிடம் முறையிடத் திட்டமிட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையும் இல்லை

உலகிலும் இலங்கையிலும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்ததன் மூலம் மக்கள் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றனர். ஆனால் இறுதியில் மக்களை தவறாக வழிநடத்தவும் அவமானப்படுத்தவும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை ஒரு வருந்தத்தக்க விடயமாகும். எனவே, இந்த சமூக ஊடகங்களை உருவாக்கியவர்களே அதற்கான விதிகளை கொண்டு வந்தனர்.

தற்போது இலங்கையிலும் சமூக ஊடகக் கண்காணிப்பின் அவசியம் குறித்து பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகிறது. தற்போது இலங்கையில் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளும் தொலைக்காட்சிச் சட்டத்தால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுகின்றன. அது எவ்வகையிலும் நியாயமான ஊடக வளர்ச்சிக்கு பொருத்தமற்றது.

அவ்வாறென்றால், உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள் தகவல் தொடர்பாடலை அல்லது ஊடகங்களை ஒழுங்குபடுத்தவும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கவும், சட்ட விதி முறைகளை தயாரித்துள்ளன.

உதாரணமாக, சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக மேம்பாட்டு அதிகார சபைச் சட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

உதாரணமாகக் கூறினால், குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் முகநூல், வாட்ஸ்அப், இன்ஸ்ரகிராம் மற்றும் யூடியுப் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் வழங்கப்படும் செய்திகள் குறித்து மிகவும் சங்கடமான சூழ்நிலையில் உள்ளனர்.

இளைஞர்கள் வாழ்நாளில் மிகவும் பெறுமதியான அழகிய காதல் கதைக்கும் பெரும் தடைகள் ஏற்பட்டுள்ள நிலையில் அது, அவர்களை தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு சென்றிருக்கும் இவ்வகையான சமூக ஊடக வலையமைப்பு மூலம் இடம்பெறுகின்றமையினால் அவர்களும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளதுடன் இதற்கு, சட்ட விதிகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகள் தேவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உலகில் உள்ள முகப்புத்தகம் உள்ளிட்ட ஏனைய தகவல் பரிமாற்றத் தளங்கள் மக்களுக்கு தீங்கு விளைவிப்பதைக் கட்டுப்படுத்தல், சரியான தகவல்களை சிறந்த முறையில் மக்களுக்கு வழங்குவது மற்றும் தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமல்படுத்துவதல் ஆகியவை கற்ற மற்றும் முன்னேறி வரும் ஒரு சமூகத்துக்கு மிக முக்கியமான விடயம் என்பதை நாம்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# போராட்டங்களை தோற்றுவிக்க ஜே.வி.பி. முயற்சி மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமாம்

## மஹிந்தானந்த அளுத்கமகே கோரிக்கை



விடுதலை புலிகளுக்கு இணையான பயங்கரவாத அமைப்பாகவே மக்கள் விடுதலை முன்னணி நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியது.நாடு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் மக்களை குழப்பி மீண்டும் போராட்டத்தை தோற்றுவிக்க மக்கள் விடுதலை முன்னணியினர் முயற்சிக்கின்றனர். மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலபிட்டி நகரில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். கொவிட் பெருந்தொற்று தாக்கத்தால் அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. கொவிட் தாக்கம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல.

இலங்கை இறக்குமதி பொருளாதாரத்தை மாத்திரம் நம்பியுள்ளதால் கொவிட் பெருந்தொற்று தாக்கம் ஏனைய நாடுகளைக்காட்டிலும் இலங்கைக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தியது. சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் வீழ்ச்சியடைந்ததால் வெளிநாட்டு கையிருப்பு பாதிக்கப்பட்டது.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி தடைப்பட்டன. 13 மணித்தியாலங்கள் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் நெருக்கடிக்குள்ளான மக்கள் ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மக்களின் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியினரும் மக்கள் விடுதலை முன்னணியிரும் பயங்கரவாதப் போராட்டமாக மாற்றியமைத்து அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிவை இராஜினாமா செய்யும் அளவுக்கு பிரச்சினைகளைத் தீவிரமாக்கினார்கள்.

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியான தீவிரமடைந்த சூழ்நிலையில் அரசமைப்பின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டோம். மாறுபட்ட அரசியல் கொள்கையை கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

எதிர்வரும் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் நாட்டுக்காக சிறந்த தீர்மானத்தை எடுப்போம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. ஜனாதிபதியின் சீன விஜயம் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு சாதகமாக அமையும். எதிர்வரும் மாதம் முதல் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைவடையும். 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும்.

விடுதலைப் புலிகளுக்கு இணையான பயங்கரவாத அமைப்பாக மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டு நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியது. நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் மக்களை குழப்பி மீண்டும் போராட்டத்தை தோற்றுவிக்க மக்கள் விடுதலை முன்னணியினர் முயற்சிக்கின்றனர்.

மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். தேர்தல் ஊடாகவே இனி ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்படும். - என்றார். (05)

# விவசாய நிலங்களுக்கு விடுவிக்கப்படும் நீருக்கு வரி அறவிட்டால் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பேன்

## நீர்பாசனத்துறை அமைச்சர் திட்டவட்டம்



விவசாய நிலங்களுக்கு விடுவிக்கப்படும் நீருக்கு வரி அறவிட்டால் அதற்கு நானே முதலாவதாக எதிர்ப்பு தெரிவிப்பேன். நீர் கண்காணிப்பு ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதே தவிர நீருக்கு வரி அறவிடும் நோக்கம் கிடையாது என நீர்பாசனத்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவை திம்புலாகல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் இருந்து தற்போது மீண்டுள்ளோம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான எமது அரசாங்கம் எடுத்த தவறான அரச நிர்வாக தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி அவர் தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம். அரசியல் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுவதால் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்கள் குறித்து தற்போது அவதானம் செலுத்த முடியாது. அடுத்த ஆண்டு ஜனநாயக அம்சங்களுக்கு அமைய தேர்தலை நடத்துவதற்கான அரசியல் மற்றும் பொருளாதார சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சேதன பசளை தொடர்பில் எமது அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் விவசாயத் துறை பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. விவசாயிகள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார்கள். விவசாயத்துறையில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்கள் திருத்திக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினர் விவசாயிகளை மீண்டும் வீதிக்கு இறக்கி போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிக்கிறார்கள்.

விவசாய நிலங்களுக்கு விடுவிக்கப்படும் நீருக்கு வரி அறவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. அவ்வாறான தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தால் விவசாய மாவட்டத்தின் பிரதிநிதி என்ற அடிப்படையில் நானே முதலாவதாக எதிர்ப்பு தெரிவிப்பேன். விவசாய நிலங்களுக்கு விடுவிக்கப்படும் நீரை ஒரு தரப்பினர் தவறாக பயன்படுத்துகிறார்கள். இதனை கண்காணிப்பதற்கு நீர் கண்காணிப்பு ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

(05)

# பாலஸ்தீனம் தொடர்பில் தவறான சித்திரிப்புகள்: மத்திய கிழக்கு தொழிலாளர்கள் பாதிப்படைவு

## எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டு

பாலஸ்தீன் - இஸ்ரேல் யுத்தத்தை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் இலங்கையில் பாலஸ்தீனம் குறித்து தவறான சித்திரிப்புகளை சமூகமயப்படுத்த முயற்சிக்கிறார்கள்;. இவ்வாறான செயற்பாடுகள் தீவிரமடைந்தால் மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் பல்லாயிரம் இலங்கை பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பலவீனமடைந்துள்ளது. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய பிளவுபடாத வெளிவிவகார கொள்கைக்கு சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்தன. அதேபோன்று சர்வதேச மட்டத்திலும் சிறந்த அங்கீகாரம் கிடைத்தது.

பொருளாதாரப் பாதிப்பின் பின்னர் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பலவீனமடைந்துள்ளதை பல சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சீனாவின் கப்பல் விவகாரம் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் சீன விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளார். ஒரு சில விடயங்கள் மற்றும் தீர்மானம் தொடர்பாக அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

சீன கப்பல் வருகை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூர நோக்கு சிந்தனையுடன் ஒரு தீர்மானம் எடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம். சீன கப்பல் விவகாரத்தில் இலங்கை மற்றும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானம் எடுப்பது அத்தியாவசியமானது.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை நெகிழும் தன்மையில் காணப்படுவதால் தற்போது பூகோள தாக்கங்களுக்கு மத்தியில் பலவீனமடைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் அங்கீகாரத்தை அடிப்படையாக் கொண்டு வெளிவிவகாரக் கொள்கை புதுப்பிக்கப்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய வெளிவிவகாரக் கொள்கை பல்லினத்தன்மையை கொண்டுள்ளது ஆரோக்கியமானதல்ல,

பாலஸ்தீன் - இஸ்ரேல் யுத்தம் பூகோள மட்டத்தில் நிச்சயம் தாக்கம் செலுத்தும். இலங்கைக்கும் மறைமுகமான தாக்கங்கள் ஏற்படும். பாலஸ்தீன் -இஸ்ரேல் யுத்தத்தை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் இலங்கையில் தவறான சித்திரிப்புக்களை முன்னெடுப்பதை அவதானிக்க முடிகிறது. இது தேவையில்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். தற்போதைய நெருக்கடியான நிலையில் வெறுக்கத்தக்க பேச்சுகளுக்கு இடமளிக்கக்கூடாது.

மத்திய கிழக்கு நாடுகளில் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் வீட்டு பணிப்பெண்களாகவும், தொழிலாளர்களாகவும் பணிபுரிகிறார்கள். பாலஸ்தீனம் தொடர்பில் இலங்கையில் தவறான சித்திரிப்புக்கள் முன்னெடுக்கப்படும் போது அது இலங்கை தொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் பொருளாதாரமும் பாதிக்கப்படும். ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். - என்றார். (05)

# கடன் மறுசீரமைப்புக்கு சீனா இணக்கம் நாட்டின் எதிர்காலம் குறித்து நம்பிக்கை

## என்கிறார் பாலித ரங்கே பண்டார

சீனாவின் எக்சிம் வங்கி 4.1 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு செய்வதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதன் மூலம் நாட்டின் பாகேக்கை சிறந்த நிலைக்கு உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டிருக்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து படிப்படியாக மீள ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாகக் கடந்த வாரம் இந்து சமுத்திர வலய மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த அனைத்து அரசாங்கங்களும் இலங்கையை பாராட்டி கருத்து தெரிவித்திருந்ததுடன் அவர்களின் உதவிகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தன.

அத்துடன் எமது கடன் மறுசீரமைப்பில் முக்கிய நாடான சீனா தற்போது அவர்களின் விருப்பத்தை தெரிவித்திருக்கிறது. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு பெரிஸ் சமூகம் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் ஏற்கனவே தங்களின் ஒத்துழைப்பை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றன. சீனாவின் எக்சிம் வங்கி 4.1 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு செய்வதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

இதன் பிரகாரம் நாட்டின் பாகேக்கை சிறந்த நிலைக்கு உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டிருக்கிறது. நாடு தொடர்பாகவும் நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும் எமக்கு நம்பிக்கை வைத்துக்கொள்ள முடியுமான நிலைக்கு நாட்டை கொண்டுவந்திருக்கிறோம். அதனால் ஜனாதிபதியின் தலைமைத்துவம் தொடர்பாகவும் அவரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நம்பிக்கைகொள்ள முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோன்று வீழ்ச்சியடைந்திருந்த ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் பலம்மிக்க கட்சியாக மாற்றுவதுபோல் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீள கட்டியெழுப்பி வருகிறோம். - என்றார். (05)

# கிளிநொச்சி வேரவிலில விபத்து; 2 பிள்ளைகளின் தந்தை இறப்பு

கிளிநொச்சி வேரவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட வேரவில் பிரதான வீதியின் வேரவில் வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜெயபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். பூநகரி வலைப்பாட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிதம்பரநாதன் வர்மகுமார் (வயது–32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நம்பிக்கைத் துரோகம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி மாளிகையானது தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சுமார் 50 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இது தொடர்பானஒப்பந்தம்நேற்றுக்கையெழுத்தாகியிருக்கிறது.

இதன்முதலீட்டுமதிப்புஅண்ணளவாக5000பில்லியன் ரூபாய்கள். கனேடிய முதலீட்டாளருடன் இணைந்து இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இந்த இடத்தில் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை உருவாக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாகவே இந்த திட்டம் செயற்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசுத்தலைவர்அலுவலகத்தின்தேசியபாதுகாப்புக்கான தலைமை ஆலோசகரும், அரசுத் தலைவரின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதிமாளிகையை இலங்கைதகவல்தொழில்நுட்ப நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த ஜனாதிபதி மாளிகையின் கட்டுமானப் பணிகள் முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. இது 2010 –முதல் 2015க்கு இடைப்பட்ட ஐந்தாண்டுகளுக்குள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு கிட்டத்தட்ட முடிவுறும் நிலைக்குக்கொண்டு வரப்பட்டிருந்தது. இந்தக் கட்டுமானப் பணிகளைத் தமிழ் மக்கள் கடுமையாக எதிர்த்தனர். கட்டுமானம் முன்னெடுக்கப்படும் பகுதிக்குள் தனியாருக்குச் சொந்தமான காணிகளும் இந்துமத நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளும் இருந்தமையே அதற்கான காரணம். 2015இல் மைத்திரிபால சிறிசேன அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இதன் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

ராஜபக்ஷக்கள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னரே இந்துப்பகுதிக்குள்வெளியாட்கள்சென்று மாளிகையைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதே இதன் கட்டுமானத்திற்காக எவ்வளவு நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது என்பது தெரியவந்தது.

காங்கேசன்துறையில்அமைந்துள்ள இந்த மாளிகை வளாகம் 30 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது, அதில் 12 ஏக்கரில் ஏற்கனவே அரசுத் தலைவர் மாளிகைக் கட்டடத் தொகுதிகள் அமைந்துள்ளன. இருப்பினும் மிகுது 18 ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அரசுக்குச் சொந்தமானது 12 ஏக்கர் மட்டுமே.

இப்போது இந்த 30 ஏக்கருமே தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்காகக்குத்தகைக்குவிடப்பட்டுள்ளது. இங்கு பல்கலைக்கழகம் அமைவதன் மூலம் ஆண்டுதோறும் சுமார் 1500 மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவு கிட்டும் என்று கூறப்படுகின்றது. அது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் அந்தக் காணிக்குரிய மக்களின் விருப்பங்களை அறியாமல் போர் வெற்றியின் பயனாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை இந்த ஆட்சியாளர்களும் இவ்வாறு மக்களின் விருப்புக்கு மாறாகப் பயன்படுத்த நினைப்பதை ஏற்க முடியாது.

அந்தக் காணிகளுக்குரிய சொந்தக்காரர்களின் விரும்பமின்றி அரசு தனது பலத்தின் மூலம் நிலத்தைப் பறிக்க முற்படுவது, அந்தப் பகுதி நிலங்கள் மக்களிடம் கையளிக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறிவந்ததற்கும் முற்றிலும் முரணானது. எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இந்த மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்றும் தெல்லிப்பளையில் மக்களுடன் மக்களாக அமர்ந்திருந்து அவரும் போராட்டம் நடத்தியுள்ளார். அப்படியிருந்தும் மக்களின் விருப்புக்கு மாறாக அந்தக் காணிகளை அரசுடமையாக்குவது கண்டிக்கத்தக்கது. அது நம்பிக்கைத் துரோகமும்கூட. எனவேஇந்தநடவடிக்கைஉடனடியாகநிறுத்தப்படவேண்டும். அங்குள்ள அரச நிலப்பகுதியில் பல்கலைக்கழகத்தை அமைத்துக்கொள்ளலாம்.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# பயனளிக்கும் பனை மட்டை



அங்கம் -18

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

கற்பகதருவாய் விளங்கும் பனைமரத்தை தமிழ்நாடு 'மாநில மரமாய் ' பெருமைப்படுத்தி நிற்கிறது. பனை என்றாலே கொடை என்னும் எண்ணந்தான் மனதில் எழுகிறது. கொடைக்குக் கர்ணணன் போல கற்பகதருவும் வள்ளல் தன்மையினைக் கொண்டதாகவே அமைந்திருக்கிறது. மக்களுக்கு எந்த வகையில் பயன் படலாமோ அந்தவகையில் பயன்பட்டு நிற்கத் தயாராகவே இருப்பேன் என்றுதான் பனை உறுதி மொழியினை எடுத்திருக்கிறது போல் தெரிகிறதல்லவா ! அந்த அளவுக்கு அது கொடுக்கும் பயன்பாடு அளவிறந்து அமைந்திருக்கிறது என்பதைக் கருத்திருத்தல் அவசியமேயாகும்.



சாதாரண கங்குமட்டையே கைத்தொழிலுக்கானதும்பினை அளித்தது. கங்கு மட்டையின் தும்பினால் பலர் தொழில்களைப் பெற்றனர். வருமா னத்தையும் பெற்று வாழ்க்கைக்கு ஆதாரமும் ஆக்கி நின்றனர். அது மட்டுமல்ல வெளி நாடுகளும் விரும்பி வாங்கி வருவாய்க்கும் வழிவகுத்தது.

இந்தியா, இலங்கை நாடுகளின் பொருளாதாரத்திலும் ஒரு பங்களிப்புக்கு இடமாகியும் இருந்தது என்பதையும் பார்த்தோம். சாதாரண கங்கு மட்டைக்குள்ளும் கைக் தொ-ழிலுக்கான மூலப்பொருளை அதாவது தும்பை வைத்திருக்கும் பனையை பாராட்டியே ஆக வேண்டும் அல்லவா !

கங்குமட்டையினை அளித்துவிட்டு- கங்கு மட்டை கொடுக்கும் கொடையினைப் பனையின் மட்டை பார்த்தபடியே இருக்கும். அதற்காகத் தானும் ஏதாவது கொடுத்தால் என்ன என்ற எண்ணம் தோன்றி விடும்.பன மட்டையும் தன்னைக் கொடுத்து - உங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று தாராள சிந்தை யுடன் கேட்டு நிற்கும். காய்ந்த மட்டை வேலியில் நிற்கும். வீட் டுக் கூரையில் அமர்ந்துவிடும். ஏன் விறகாகவும் ஆகி நிற்கும். காய்வதற்கு முன்னிருக்கும் பச்சை மட்டை - என்னை என்னவும் செய்யுங்கள் என்றபடி இருக்கும். அந்தப் பச்சை மட்டைக்குப் பாதுகாப்பாய் , இரு பக்கமும் கறுத்தக் காவலர் இருப்பர். இவர்களை கருக்கு என்று அழைக்கிறோம். இதனால் ' கருக்கு மட்டை ' என்றும் பெயரைத் தாங்கி நிற்கிறது பனை மட்டை. பச்சைப் பனை மட்டை கருக்குடன் இருக்கும். நாரினை எடுக்கும் முன்பாக மட்டையின் இரண்டு பக்கங்களிலும் காவலர் போல இருக்கின்ற கருக்கினை கத்தியைப் பயன்படுத்தி அரை அங்குல அகலத்தில் பிரித்து எடுக்கிறா ர்கள். நார்களை எடுப்பதற்கு இம்முதற்படி அவசியமானதாக அமைகிறது, தரமுடையதாக நார்களை எடு க்க வேண்டுமானால் இப்படிச் செய்வது கட்டாயம் ஆகிறது





பனை மட்டையிலிருந்து கிடைக்கும் நாரானது மூன்று வகையாக அமைகிறது. முதலாவது அகணிநார். இது மட்டையின் உட்பக்கத்தில் இருந்து பிரித்து எடுக்கப்படுகிறது. இரண்டாவது புறணி நார். இந்த நார் பனை மட்டையின் புறப்பகுதியிலிருந்து உரித்தெடுக்கப்படுகிறது. மூன்றாவதாக வருவதுதான் சோத்தி நாராகும். இது பனை மட்டையின் நடுப்பகுதியிலிருந்து உரித்து எடுக்கப்படுகிறது.

முதலாவதாக வருகின்ற அகணிநாரின் பயன்பாடு பல விதங்களில் அமைகிறது.அகணி நாரானது நல்ல வலிமை மிக்கதாக இருக்கிறது. இதனால்த் தான் இது முதலாந்தர நாராய் முன்னிற்கிறது எனலாம். பனை மரத்தைப் பயன்படுத்தி-படுப்பதற்கு கட்டில்கள் செய்யப்படுகின்றன. இப்படிச் செய்யப்படும் கட் டில்களின் மேல் பகுதி பனம் நார்கள்கொண்டுபின்னப்படுகிறது. பனம் நார் கொண்டு கட்டில் செய்வது ஒரு தொழிலாகவே தமிழ் நாட்டில் நடைபெறுகிறது என்பதை கருத்திருத்தல் அவசியமாகும். இந்தியாவில் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் பனைத் தொழிலினை நம்பி ஏறக்குறைய முப்பது ஆயிரத்துக்கு மேற் பட்ட குடும்பங்கள் இருப்பதாக அறிய முடிகிறது.இவர்கள் அனைவரதும் வாழ்வாதாரமே பனையா கவே இருக்கிறது.பனையின்பொருட்களை அந்தந்தக் காலங்களில் உற்பத்தி செய்து அதனால் கிடைக்கும் வருமானத் தில்த்தான் அவர்கள் சீவியம் நடக்கிறது என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.திருச் செந்தூர், நாசரேத்,

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கற்பகதரு என்னும் அற்புதம்...............



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சாத்தான்குளம்,உடன்குடி, திசையன்ன விளை, ஏரல், ஓட்டப்பிராம், அந்தோணியா-ர்புரம், வேம்பார், ஆகிய பகுதிகளில் பனைத் தொழிலை நம்பி வாழ்பவர்கள் பலர் இருந்து வருகிறார்கள்.பனை நார் கட்டிலைச் செய்வதில் அக்கறை உள்ளவர்களாய் இங்குள்ள மக்கள் விளங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

பனை நார் கட்டிலுக்கு உரிய மூலப் பொருட்கள் - தென்காசி, திரு ச்செந்தூர், ஏரல் சுற்று வட்டாரங்களில் கிடைப்பதாக இங்குள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை என்னும் இடத்தைச் சேர்ந்தவர் தினேஷ் குமார். இவர் ஒரு சுற்றுலாத்துறைவழிகாட்டியாக இருந்தார். ஆரம்பத்தில் சென்னையில் வேலைபார்த்த இவருக்கு நாகர் கோவில் பகுதியில் வேலை பார்க்கும் நிலை ஏற்பட்டது.சுற்றுலா வழிகாட்டியாக இவர் இருப்பதால் பல இடங்களுக்கும் செல்லும் அருமையான வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.இப்படிப் பல இடங்களைச் சுற்றிவந்தவர் -கன்னியாகுமரி , திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிகளவில் விளையும் கற்பக தருவாம்

பனைமரங்களின் எண்ணிக்கையானது குறைந்துவருவதை அறியும்வாய்புக்கிட்டியது. சுற்றுலாத்துறைவழிகாட்டியானஇவருள்ளத்தில் பனையும் அதைச் சார்ந்த தொழிலும், அதில் ஈடுபடும் மக்களும் பற்றிய எண்ணம் உதயமானது.கிராமப்புறங்களில்பனம்பொருள்பற்றிய விழிப்புணர்வானது குறைந்து கொண்டே வருவதை அவரறிந்து கொண்டார்..அதுமட்டு மன்றி , பனைத் தொழிலினை நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்கு சரியான வேலைவாய்ப்புக் கிடைக்காததால் -பனைத் தொழிலினை விட்டு வேறு வேலைகளுக்குப் போகும் நிலை அதிகரித்திரிப்பதையும் மனமிருத்தினார். பனை தொடர்பான இந்த நிலை அவரிடம் ஒரு உத்வேகத்தை எழுச்சி பெற்றிட வைத்தது.நலிவடைந்து வரும் பனந்தொழிலையும்,

அதில் ஈடுபட்டுழைத்த தொழிலாளரையும் , தாங்கி அவர்களுக்கு ஆதரவுக் கரங்கொடுக்க அவர் செயலில் இறங்கினார்.

ஆர்வம் மேலிட்டதால் தினேஷ் குமார் தன்னுடைய மனைவியையும் இணைத்துக்கொண்டு- பல வியங் களைத் தேடித் தேடிப் பெற்றுக்கொண்டார். பல இடங்களுக்கும் நீண்ட பயணங்களையும் மேற் கொண்டார் .நிறைவில் பனை நார் கட்டில் விற்பனையில் ஈடுபட்டார்.பத்தாம் வகுப்புவரையில் படித்தவர் தான் தினேஷ் குமார்.இவரின் நல்ல எண்ணத்தால் - பனையின் தொழிலையே நம்பியிருக்கும் நாகர் கோவில் அருகேயுள்ள ரோஸ்மியாபு-ரம் கிராமத்தைச் சேர்ந்த பதினைந்து பேர் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் நல்லதொரு நிலை ஏற்பட்டது..நகரப்புறத்தில் உள்ளவர்கள் பனை நார் கட்டில்களின் மகத்துவத்தை அறியாமல் இருக்கிறார்கள். அத்துடன்அவர்களிடம்பனைநார்கட்டில்களை கொண்டு செல்லுவதும் சவாலாகவே இருப்பதாகவும் தினேஷ் குமார் தெரிவிக்கின்றார். நம்பிக்கையினை விடாமல் , பல்வேறு வடிவங்களில், வண் ணங்கள் கொண்டதான அமைப்பில் பனை நார் கட்டில்களை உற்பத்தி செய்வதில் பெரும் ஆர்வத்தை காட்டி வருகிறார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். இலாபத்தை எதிர்பார்க்காமல் பனந் தொழிலில் கொண்ட அக்கறையினால் செய்து வருவதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

பனை நார் கட்டிலைப் பிரபலப் படுத்து-வதும் , இந்தத் தொழிலை நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுப்பது மட்டுமே , என்னுடைய தற்போதைய இலக்கு என்கிறார் தினேஷ் குமார்.இந்தத் தொழிலில் மிகுந்த ஆர்வமு-டைய இவர் நூற்றுக்கு மேற்பட்ட பனை நார் கட்டில்களை விற்ப னையும் செய்திருப்பதாய் மகிழ்வுடன் தெரிவிக்கின்றார்.

செயற்கைப் பொருளான பிளாஸ்டிக்கில் செய்யப்படும்பெரியகதிரைகளில்நீண்டநேரம் இருந்து எழும் பொழுது- இருந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தால் அந்த இடமும் சூடாக இருக்கும். நம்முடைய உடலும் சூடா கவே ஆகியும் இருக்கும்.இவ்வாறு வருகின்ற உடல் சூட்டால் பல்வேறு உடல் நலப் பிரச்சினைகள் வந்து விடுகிறது.ஆனால் பனை நார் கட்டிலில் நீண்ட நேரம் உறங்கினாலும், பனை நார்க் கதிரைகளில் நீண்டநேரம் அமர்ந்திருந்தாலும் உடல் சூடாகவே மாட்டாது.

பனைப் பொருட்கள் உடலுக்குக் குளிர்ச்சியையே தருகின்றது என்று கூறும் தினேஷ்குமார் -சுற்றுலா வழி காட்டி வேலையினை சனி ஞாயிறு தினங்களில் மட்டுமே பார்ப்பதாயும் மற்றைய ஐந்து நாட்களுமே பனை நார் தொழிலிலேயே கவனத்தைச் செலுத்துவதாய் தெரிவிக்கிறார். இணைய வழிவாயிலாகவே விற்பனை யில் ஈடுபடுவதாகவும் , பனை நார் கட்டில்களைத் தானே - தேவையானவர்களுக்கு நேரே சென்றுகொடுப்பதாகவும்தெரிவிக்கிறார்.தமிழ் நாடு மட்டுமல்லாது அண்டை மாநிலங்களும் இவரின் பனை நார் கட்டில் களை விரும்பி வாங்குவதற்கு விருப்புடன் இருப்பதாகவும், தன்னிடம் தருமாறு கேட்பதாகவும் தெரிவித்துப் பெருமைப்படுகின்றார்.இப்படி ஒரு நல்ல வெளிச்சம் பனை நார் தொழிலில் தென்படுவதால் - இத் தொழி லை மேலும் வலுப்படுத்தவும் , பல பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கவும் திட்டமிட்டமிட்டிருப்பதாக தினேஷ் குமார் தெரிவிக்கிறார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும் !

இந்தியாவில் தென் மாவட்டங்களில் பனை நார் கட்டில்கள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இப்படி யான கட்டில்கள் பனையோடு தொடர்புடைய மக்களின் பெருமையினை எடுத்துக்காட்டும் விதத்தில் - இவர் களின் வீடுகளில் இருக்கும். பனை நார் கட்டில் என்பது தமிழருக்கே உரித்தானதுதான் என்று தான் எண்ண வேண்டி இருக்கிறது. இந்தத் தொழில் நுட்பம் வேறெங்கும் இல்லை என்றே சொல்லலாம். இந்த வகையில் தமிழ் நாட் டின் அதாவது தென் தமிழகம் உலகினுக்கே முன்னோடியாகத் திகழ்கிறது என்றும் அறியக்கூடி யதாக இருக்கிறது,

நெல்லை மாவட்டதில் பனை நார் கட்டில்களை வேகமாகப் பின்னுகிறார்கள் என்றும் , அதே வேளை குமரி மாவட்டத்தில் இந்த வேகம் அதிகமாய் இருப்பதாகவும் அறிய முடிகிறது.பனை நார் கட்டிலானது தனித்த ன்மை வாய்ந்தது. சிறியதாய் வகிர்ந்து வைத்திருக்கும் பனை நார்களை கட்டில் சட்டங்களில் பின்னி எடுப் பதுதான் பனை நார் கட்டிலாய் அமைகிறது.கட்டில் சட்டங்களில் பாவுகளை வலதும் இடது மாகப் பிரித்து நாற்பத்து ஐந்து பாகை கோணத்தில் செல்லும். தொய்வாக அமைந்திருக்கும் இந்தப் பாவு களை ஊடறுத்துச் செல்லும் நேர் பாவு அனைத்தையும் சீராக்கி விடும் தன்மை வாய்ந்ததாய் இருக்கும். கட்டிலில் ஓட்டைகள் தெரியும்.இப்படிப் பின்னப்படும் பின்னல்களை ' சக்கரக் கண்ணி ' என்று அழைக்கிறார்கள்.ஏறக்குறைய நான்கு முதல் ஐந்து அடி நீளம் மட்டுமே கொண்ட இந்த பனை நார்கள் , முடிச்சுகள் இடப்பட்டே இணைக் கப்படுகின்றன.இப்படி இந்த நார் இருக்கிறதே என்று எண்ணி விடாதீர்கள், இதன் பலமே அதிகம் என்று தான் சொல்ல வேண்டும்.

பனை நார்க் கட்டில் என்பது நல்லதொரு வரப்பிரப்சாதம் என்றுதான் கருத வேண்டும். இதன் தொழில் நுட் பமானது எங்களுக்கே உரித்தான தனித்துவமான ஒரு தொழில் நுட்பமே ஆகும்.சிறிய வயதில் நீராட்டி விட்டு சாம்பிராணி புகையினைப் பிடிப்பதை மறந்துவிட முடியுமா ? அப்படிச் சாம்பிராணிப் புகையினைக் காட்டும் பொழுது கட்டிலில் விடுவார்கள்.அந்த அனுபவத்தை நினைத்துப்பார்க்க வேண்டும்,பிரசவம் ஆகிய பச்சை உடம்புப் பெண்களுக்குப் படுப்பதற்கு இதமாய் பனை நார் கட்டில் இருக்கிறது.அது மாத்திரமல்ல நோயில் இருக்கும் முதியவர்களுக்கும் மிகவும் பொருத்தமாய் அமைகிறது பனை நார் கட்டில். இவர்களுக்கு மட்டுமல்ல - யாவரும் ஆனந்தமாய், ஆரோக்கியமாய் படுத்து உறங்கவும் பனை நார் கட்டில்கள் கைகொடு த்து நிற்கின்றன என்பது முக்கியமாகும்.பனை நார் கட்டிலில் இருக்கும் -நெகிழும் தன்மை,இவற்றில் கிடைக்கும் காற்றோட்டம் , ஆகியன தருகின்ற சுகத்துக்கு ஈடில்லை எனலாம்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்து்முல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்





தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# வீதியில் கண்டெடுத்த தங்க மாலை மோதிரம் பொலிஸாரிடம் ஒப்படைப்பு



களவு, கொள்ளை, பிறரின் உடைமை அபகரிப்பு போன்ற சம்பவங்கள் நடைபெற்றுவருகின்ற போதிலும், வீதிகளில் கண்டெடுக்கப்படும் பெறுமதியானதனக்கு உரித்தில்லாத பொருள்களை பொலி-ஸா ரிடம் ஒப்படைக்கும் மனிதர்களும் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

இவ்வாறான சிறப்பு சம்பவமொன்று நேற்று (திங்கட்கிழமை) அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று பஸ் நிலையத்தின் அருகில் நடந்து சென்ற கோயில் வீதி, திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த அன்ரி மலேரியா ஒழிப்பு பிரிவில் கடமையாற்றும் கணபதிப்பிள்ளை கார்த்திகேசு என்பவர் மாலை ஒன்றையும் மோதிரம் ஒன்றையும் கண்டெடுத்துள்ளார்.

இதன்போது, அருகில் இருந்த இன்னுமொருவர் அது தன்னுடையது என கூறி பெற்றுக்கொள்ள முயற்சித்த போதிலும் அதனை உரியவரிடமே ஒப்படைக்கவேண்டும்எனஅவர் கூறியுள்ளார். இருந்தபோதிலும் குறித்த நபர் அந்த மாலையைத் தனது என பெற்றுக்கொண்ட நிலையில் மாலை மற்றும் மோதிரத்தை கண்டெடுத்த கார்த்திகேசு அக்கரைப்பற்று பொலிஸாரிடம் விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து குறித்த இடத்திற்கு சென்றபொலிஸார்நகையினை மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்து கண்டெடுத்தவர் மூலமாக பெற்றுக்கொண்டனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ.பி. விஜயதுங்கவின்ஆலோசனைக்கு அமைவாக பெருங்குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி எம்.எச்.எம்.ஹசிப்தலைமையிலான பொலிஸார் மாலையைப் பொறுப்பேற்றதன்பின்னர்மாலை மோதிரத்தை ஒப்படைத்தவரை பாராட்டினர். இதேநேரம் அக்கரைப்பற்று பொலிஸ் ஆலோசனைகுழு உறுப்பினர் ஆறுமுகம் அசோக்கவும் சம்பவ இடத்திற்கு சென்று மாலையை ஒப்படைத்தவருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொண்டார். (05)

# தேடப்பட்டுவந்த சந்தேகநபர் பொலிஸால் சுட்டுக்கொலை

சபுகஸ்கந்த பிரதேசத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தானை பிரதேசத்தில் இடம்பெற்ற பல துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை இரவு சப்புகஸ்கந்த பிரதேசத்தில் பொலிஸாருடன் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டின் போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான ராமையா ஜெயராஜ் சப்புகஸ்கந்த கோனவில பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பதுங்கியுள்ளதாகப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த வீட்டை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அப்போது, சந்தேகநபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து கிரிபத்கொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# தனக்குத்தானே தீ வைத்த பின்னர் பொலிஸாரை கட்டிப்பிடித்த நபர்

## வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சம்பவம்

போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கட்டிப்பிடித்ததில் இருவரும் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வந்த குறித்த நபர் தனது குழந்தையைத்தாக்கியபோது அதனை தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியே-ாகத்தர் ஒருவரே இந்த சம்பவத்தில் அகப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது உடம்பில் பெற்றோலை ஊற்றிக் கொண்டு தீ வைக்க முற்பட்ட போது அதை தடுக்கச் சென்ற வேளையில் அந்நபர் தீ வைத்துக்கொண்டு பொலிஸாரைக் கட்டிப்பிடித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில், தீக்காயங்களுக்குள்ளான நபரும் பொலிஸ் உத்தியோகத்தரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில், தனக்குத்தானே தீ வைத்துக்கொண்ட நபர் ஆபத்தான நிலையில்சிகிச்சைபெற்றுவருவதுடன், பொலிஸ் உத்தியோகத்தர் தீக்காயங்களுடன் கால் ஒன்று உடைந்த நிலையில்சிகிச்சைபெற்றுவருகின்றார்.

இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கொழும்பு வந்த இந்தோனேசிய கடற்படைக் கப்பல் புறப்பட்டது

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தோனேசிய கடற்படைக் கப்பலான கிரி பிமா சுசி - 945 நாட்டிலிருந்து வெளியேறியுள்ளது.

இந்தோனேசிய கடற்படைக்குச் சொந்தமான கிரி பிமா சுசி - 945 எனும் கப்பல் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை, கொழும்பு துறைமு-கத்தை வந்தடைந்த நிலையில் குறித்த கப்பலானது ஞா-யிற்றுக்கிழமை நாட்டிலிருந்து வெளியேறியது.

இந்த கப்பல் கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பு துறைமுகத்திற்கு உத்தியோகபூர்வவிஜயமொன்றை மேற்கொண்டது.

இந்த இந்தோனேசிய கடற்படைக் கப்பல் தளபதி எம். சதி லூபிஸ் தலைமையில் 95 பயணிகளால் நிர்வகிக்கப்படுகின்றது.

கப்பலின் பணியாளர்கள் நாட்டிலிருந்த காலப்பகுதியில் நாட்டின் சில சுற்றுலாத் தளங்களுக்கு செல்ல சந்தர்ப்பமும் வழங்கப்பட்டிருந்தது.

இதனைதொடர்ந்துகுறித்தகிரி பிமாசுசி - 945எனும்கப்பலானது ஞாயிற்றுக்கிழமை மாலை நாட்டிலிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டுப் குடிமக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம்

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு



சிங்கப்பூரின்தகவல்மற்றும்தொடர்புஊடக அதிகாரசபைச்சட்டத்தைப்போன்றுநாட்டிலும் சட்டத்தைக் கொண்டுவந்து, உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் பிரஜைகளின் உரிமையை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகிலும் இலங்கையிலும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்ததன் மூலம் மக்கள் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றனர்.

ஆனால், இறுதியில் மக்களைத் தவறாக வழிநடத்தவும் அவமானப்படுத்தவும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை ஒரு வருந்தத்தக்க விடயமாகும்.

எனவே, சமூக ஊடகங்களை உருவாக்கியவர்களே அதற்கான விதிகளைக் கொண்டு வந்தனர்.

தற்போது நாட்டிலும் சமூக ஊடகக் கண்காணிப்பின் அவசியம் குறித்து பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகிறது.

நாட்டின் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளும் தொலைக்காட்சிச் சட்டத்தால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுகின்றன.

அது எவ்வகையிலும் நியாயமான ஊடக வளர்ச்சிக்கு பொருத்தமற்றது.

அவ்வாறென்றால், உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள் தகவல் தொடர்பாடலை அல்லது ஊடகங்களை ஒழுங்குபடுத்தவும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கவும், சட்ட விதி முறைகளைத் தயாரித்துள்ளன.

சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக மேம்பாட்டு அதிகார சபைச் சட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

ஆசியாவிலும், உலகிலும் இலங்கை வலுப்பெற்று நிற்க, ஊடகங்களின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

அரசியலில் ரீதியில் சிந்தித்துப் பார்த்தாலும் கூட, அரசியலில் பொய்களை பரப்பும் கலாசாரம் எமது நாட்டில் மாற வேண்டும்.

அதேநேரம், அத்தியாவசியமான உண்மைகளை மறைக்காமல் இருப்பது குறித்தும் ஊடகங்களுக்குப் பொறுப்பு உள்ளது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இத்தகைய கண்காணிப்பு முறை, ஊடகங்களை வலுப்படுத்துமே தவிர ஊடகங்களைக் கட்டுப்படுத்தாது என்பதை அனைத்து ஊடகவியலாளர்களும் மற்றும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## நிகழ்நிலை...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவில் கொள்ள வேண்டும்.

அப்படியானால், ஆசியாவிலும், உலகிலும் இலங்கை வலுப்பெற்று நிற்க, ஊடகங்களின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். இலங்கையிலுள்ள அனைத்து ஊடகநிறுவனங்களும்சிங்கப்பூரின் ஊடகச் சட்டத்தை வாசித்தால் அது மிகவும் முக்கியமானது.

ஒளிபரப்பு சேவை அனுமதி வழங்குவதற்கும், அதை இரத்து செய்வதற்கும், தவறான தகவல்களை வழங்கினால் அதைத் திருத்துவதற்குத் தேவையான தண்டனைவிதிக்கவும்அவர்களுக்கு முழுஅதிகாரம்வழங்கப்பட்டுள்ளது. அதனால்தான் இத்தகைய நாடுகள் உலகில் பலம் வாய்ந்த நாடுகளாக மாறிவிட்டன.

அரசியலில் ரீதியில் சிந்தித்துப் பார்த்தாலும்கூட, அரசியலில் பொய்களைப் பரப்பும் கலாசாரம் இலங்கையில் மாற வேண்டும். அதேநேரம், அத்தியாவசியமான உண்மைகளை மறைக்காமல் இருப்பது குறித்தும் ஊடகங்களுக்கு பொறுப்பு உள்ளது என்பதையும் நாம்நினைவில்கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டாக, இத்தகைய கண்காணிப்புமுறை, ஊடகங்களை வலுப்படுத்துமேதவிரஊடகங்களைக் கட்டுப்படுத்தாதுஎன்பதைஅனைத்து ஊடகவியலாளர்களும் மற்றும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் சரியான தகவல்களை வழங்குவது முழு நாட்டிற்கும் பயனுள்ள செயலாகும்.

அதனை வலுப்படுத்தும் வகையில், அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து, ஊடகங்களில் பொய்யான அறிக்கைகளை வெளியிடுவதைத் தடுப்பதற்கான பரிந்துரைகள், ஆலோசனைகள் மற்றும் வழிமுறைகளை முன்வைக்கவும் வாய்ப்பு உள்ளது.

இப்போது நமது அண்டை நாடான இந்தியா ரிக்டாக் சமூக ஊடகம் உட்பட 58 தொலைபேசி செயலிகளை தடை செய்துள்ளது. எவ்வாறாயினும் பல அரசியல்வாதிகள் இந்தியாவைப் பற்றி பேசுகிறார்கள், ஜப்பானைப் பற்றி பேசுகிறார்கள், சிங்கப்பூரைப் பற்றி பேசுகிறார்கள், தென் கொரியாவைப் பற்றி பேசுகிறார்கள், சீனாவைப் பற்றி பேசுகிறார்கள். அவற்றை முன்னேறிய நாடுகள் என்பதற்கு உதாரணமாகக் காட்டுகின்றனர். ஆனால்வளர்ந்த நாடுகளாக உள்ள நாடுகளின் சட்ட விதிமுறைகளை யாரும் தெரிந்துகொள்ள முயல்வதில்லை. மலேசியாவைப்பற்றியும் கூறப்படுகிறது.

அந்த நாடுகள் உலகின் முன் சக்தி வாய்ந்ததாக நிற்பதற்குத் தேவையானஅனைத்துஅரசமைப்பு மற்றும் சட்ட விதிமுறைகளையும் முழுமையாகத் தயாரித்துள்ளன. எனவே இலங்கையர்கள் என்ற வகையில், ஊடகத்துறையைவிருத்தி செய்வதற்கும் இலங்கை மக்களை உயர்மட்ட அறிவுத்துறைக்குக் கொண்டு செல்வதற்கும் தற்போது முறைமையற்றஊடககலாசாரத்தை சட்டப்பூர்வமாக ஒழுங்குபடுத்துவது மிகவும் அவசியமாகும்.

மக்களே, மக்களை இழிவுபடுத்துவது, மக்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது, போன்று மக்களே மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லப்படுவதைத் தடுப்பது, புதிய ஒளிபரப்பு அதிகார சபைச் சட்டமான 'ஒன்லைன் முறைகளின் பாதுகாப்பு தொடர்பிலான சட்டம்' மூலம் செய்யப்படும் முக்கிய செயல்முறைகளில் ஒன்றாகும். உலகஅரங்கில்இலங்கை,வலுவான இருப்பை வைத்திருப்பதற்கு இது மிகவும் முக்கியமானது என்பதை நான்கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

இவ்வாறு நியமிக்கப்படும் அதிகாரசபையின்மூலம்தண்டனை வழங்க முடியாது. நீதவான் நீதிமன்றமோ அல்லது வேறு எந்த நீதிமன்றமோமாத்திரமேதண்டனை வழங்க முடியும். இந்த புதிய சட்ட விதிகள் மூலம் ஆய்வு ரீதியிலான ஊடகவியலாளரும் அதேபோன்று ஆராய்ந்து பார்க்கக்கூடிய பிரஜையும்உருவாக்கப்படுவர். இது இனங்களுக்கிடையே வெறுப்பை விதைப்பதையும் நீக்குகிறது. இந்தச் சட்டங்கள் மக்களுக்கு உண்மையைஅறியும்உரிமையை உறுதிப்படுத்துகின்றன.'என்றார்.

# தினேஷ் ஷாப்டரின் உடலை அடக்கம் செய்ய அனுமதி

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உடலை அடக்கம் செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழிலதிபர்தினேஷ்ஷாப்டரின் மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட நிபுணர் குழு, உடலைத் தகனம் செய்வது பொருத்தமற்றது என்று பரிந்துரைத்திருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பாக விசாரணை செய்த



கொழும்பு நீதிவான் நீதிமன்றம் ஷாப்டரின் உடலை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியது.

அதன்படி, கொழும்பு ஜாவத்தை மயானத்தில் ஷாப்டரின் மனைவி வாங்கியகாணியில்அவரது உடல் அடக்கம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகள்

எதிர்வரும் 31ஆம் திகதி மீண்டும் நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் விசாரணைகளை மேற்கொண்ட ஐந்து பேர் கொண்ட மருத்துவக் குழுவின் அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஊட்டச்சத்து குறைபாட்டில் 56,000 குழந்தைகள் பாதிப்பு

இலங்கையில் 56 ஆயிரம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமான யுனிசெப் வெளியிட்ட ஆய்வறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார். (05)

# நாவற்குழி பகுதியில் பெண் படுகொலை

## கணவர் கைது

யாழ்ப்பாணம் - நாவற்குழி பகுதியில் பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அவரது கணவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் நாவற்குழி ஐயனார் கோ-யிலடியில் வசிக்கும் அஜந்தன் யமுனா எனும் 23 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் மனைவியைக் கொலை செய்து விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளையிலேயே பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில்'தனது மனைவியின் மீது கொண்ட ஆத்திரத்திலேயே அவரைக் கடுமையாகத் தாக்கினார் எனவும், ஆனால் அவர் உயிரிழந்தமை தனக்குத் தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். (05)

# சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்ல முயன்ற வட்டக்கச்சி குடும்பஸ்தர் பெலாரஸில் சாவு



சட்டவிரோதமாகப் பிரான்ஸ்க்கு செல்வதற்கு முகவர் ஒருவரை நம்பிச் சென்ற கிளிநொச்சி மாவட்டம்,

வட்டக்கச்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர்ஒருவர்பெலாரஸ் நாட்டின்எல்லையில்சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று அவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

வட்டக்கச்சி, மாயவனூர் பகுதியைச்சேர்ந்தபாலசிங்கம் யுகதீபன் என்ற நாற்பது வயது மதிக்கதக்க ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்த நிலையில்பெலாரஸ் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

சட்டவிரோதமாகபிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்காக விமானம் மூலம் ரஸ்யா சென்றுஅங்கிருந்துபெலராஸ், போலந்து,ஜேர்மன் ஊடாக பிரான்ஸ் செல்வதற்கான ஏற்பாடுகள் யுகதீபனுக்காகச் செய்யப்பட்டிருந்தன. பெலாரஸிலிருந்துபோலந்துக்கான நீண்டதூரத்தைஎல்லையைக் நடந்து கடப்பதற்காக ஏழு பேர் கொண்ட குழுவுடன் சென்ற போது உடல் நிலை பாதிக்கப்பட்டு பெலராஸ் எல்லையில் யுகதீபன் உயிரிழந்துவிட்டார் என்றுகூறப்படுகின்றது. ஏனையவர்கள் இவரது சடலத்தைக்கைவிட்டுவிட்டுசென்று விட்டனர் எனம் தெரிவிக்கப்படுகிறது.

ஒக்டோபர் 7 சனிக்கிழமை பெலராஸ்எல்லையில்இருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த யுகதீபன் அங்கிருந்து வட்டக்கச்சியில்உள்ளமனைவியைத் தொடர்புகொண்டு தன்னால்நடக்கமுடியாதுள்ளது என்றும் தன்னை யாரேனும் காப்பாற்றினால்அன்றி உயிர் தப்ப வேறு வழியில்லை என்றும் தெரிவித்திருந்தார் என்று உறவினர்கள்

தெரிவிக்கின்றனர். அதுவே அவர் குடும்பத்தினருடன் இறுதியாக தொடர்பு கொண்டு பேசியதுஎன்றும்உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (113)

# தீபாவளி போனஸ் 20 ஆயிரம் ரூபா

## திகா தெரிவிப்பு

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக இம்முறை 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதம், பெருந்தோட்டக் கம்பனிகளிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் ஹற்றன் பிரதேச செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு, ஹற்றனில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன, எனவே 15 ஆயிரம் ரூபா போதாது, இம்முறை 20 ஆயிரம் ரூபா கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்ததோடு, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் நிச்சயம் போட்டியிடுவார். அவரின் வெற்றி உறுதி. அதன்பின்னர் நாட்டுக்கும், மலையக மக்களுக்கும் சிறப்பான சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

(05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY
REGISTER & BOOK
YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# புலமைப்பரிசில் வினாத்தாளை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை

## பரீட்சைத் திணைக்களம் அதிரடி

பரீட்சைக்குப் பின்னர் வினாத் தாள்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவதன் மூலம் பரீட்சையின் இரகசியத்தன்மை பாதிக்கப்படாது.

எவ்வாறாயினும் வினாத்தாள்களை சமூக வலைத் தளங்களில் வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். பரீட்சை வினாத்தாள்களை சமூக ஊடகங்களில் வெளியிட்ட நபர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைபரீட்சைத்திணைக்களத்தின் ஆணையாநாயாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இவ்வாண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஞாயிற்றுக் கிழமை நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 888 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெற்றது. இதன்போது 3லட்சத்து 37ஆயிரத்து 956 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

எவ்வாறாயினும், பரீட்சை நிறைவடைந்துகுறுகியநேரத்துக்குள் பரீட்சை வினாத்தாள்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிறக்கம் செய்யப்பட்டிருந்தது. இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இது தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்தின்ஆணையாநாயாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கூறுகையில் -

புலமைப் பரீட்சைக்குப் பின்னர் வினாத்தாள்களை சமூக ஊடகங்களில்வெளியிடுவதன்மூலம் பரீட்சையின் இரகசியத்தன்மை பாதிக்கப்படாது. இருப்பினும் பரீட்சை நிறைவடைந்து வீடு சென்ற பிள்ளைகளிடம் பரீட்சை வினாத்தாள்களை மீள விவாதிப்பது அவர்களை மிகவும் மன உளைச் சலுக்குள்ளாக்கும்.

எவ்வாறாயினும் பரீட்சை வினாத்தாள்கள் சமூக ஊடகங்களில் வெளியிட்டநபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக பரீட்சை நிறைவடைந்து வினாத்தாள்களை வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறுசட்டத்தைமீறி செயற்பட்ட தரப்பினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். - என்றார். (05)

# 2024ஆம் ஆண்டு பாதீட்டில் மண்ணெண்ணெய் மானியம் அங்கஜன் கோரிக்கைக்கு அமைச்சர் அமரவீர இணக்கம்



யாழ்ப்பாண மாவட்ட விவ சாயிகளுக்கு எதிர் வரும் 2024 பாதீட்டில் மானிய அடிப்படையில் மண்ணெண்ணெபெற்றுக் கொடுப்பதற்கான முன் மொழிவுசமர்ப்பிக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில்இடம்பெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்தில்நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்விவசாயிகள் சார் பில் முன்வைத்த கோரிக்கைக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அமைச்சரிடம் தெரிவிக்கையில்-யாழ்ப்பாண மாவட்டத்தில் கிணறுகளை நம்பியே விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் சிறுபோக பயிர்செய்கைக்கான மண்ணெண்ணெயில் இயங்கும் நீர்ப்பம்பிகளை விவசாயிகள் காலங்காலமாக பயன்படுத்தி வருகிறார்கள்.


இந்நிலையில் தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தாலும், கடந்தாண்டு ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் எமது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு விரக்தி நிலைக்கு சென்றிருந்தார்கள்.மீனவர்களுக்கு மாநில அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுவது போல் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும் என விவசாயிகள் சார்பில் கோரிக்கை முன் வைப்பதாக தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமர வீர, எதிர்வரும் வருடம் 2024 பாதீட்டில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் மானிய அடிப்படையில் வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மேலதிக அரசாங்க அதிபர்களான பிரதீபன் மற்றும் ஸ்ரீமோகன், பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# நோயாளி ஓவியம் வரைய மூளையில் சத்திரசிகிச்சை

## அனுராதபுரம் வைத்தியசாலையில் சாதனை



நோயாளி சுய நினைவுடன் ஓவியம் வரைந்துகொண்டிருக்கையில் மூளைகட்டியை பிரித்தெடுக்கும் ஒருவகை சத்திர சிகிச்சையை 'விழித்திருக்கும் கிரானியே-ாட்டமி' அனுராதபுரம் போதனா வைத்திய சாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவின் மருத்துவர்கள் மேற்கொண்டனர்.

நோயாளி சுயநினைவுடன் உள்ள வேளை மேற்கொள்ளப்படும் என்ற சத்திரசிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட சத்திரசிகிச்சையை நோயாளிகள் சுயநினைவுடன் இருக்கும்போது மேற்கொள்ளமுடியும்.

குறிப்பிட்ட மருத்துவ குழுவினர் இவ்வாறான மூன்றாவது சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர், முதலாவது சத்திரசிகிச்சையும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையிலேயே இடம்பெற்றது.

நோயாளியின் மூளையின் இடது பக்கத்தில் உள்ள கட்டியை பிரிப்பதற்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோது அவர் குறைந்தபட்ச மயக்கநிலையிலேயே காணப்பட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

36 வயது சிற்பக்கலைஞரான நோயாளி சத்திரசிகிச்சை இடம்பெற்ற வேளை ஓவியம் வரைந்துள்ளார்.

பேச்சு மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்தும் அவரது மூளையின் ஒரு பகுதியை தவிர்ப்பதற்காக அவரை ஓவியம் வரையுமாறு வைத்தியர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நொச்சியாகமவை சேர்ந்த இந்த நோயாளி சத்திரசிகிச்சையின் பின்னர், எந்த வித பாதிப்பும் இல்லாமல் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார். (05)



# லண்டன் கனக துர்க்கை ஆலய உதவி வழங்கும் செயற்றிட்டம்

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் முக்கியமான கல்வித் திட்டங்களில் ஒன்றாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்கான மாதாந்த உதவி வழங்கும் செயற்றிட்டம் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் 41 மாணவர்களுக்கு தொடர்ச்சியான இந்த உதவி வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றது.

அந்த உதவித் திட்டத்தில் மேலதிக கொடுப்பனவு ஒன்றை வழங்கு-வதுடன் இந்த மாணவர்களுடனான விசேட சந்திப்பையும் மேற்கொள்ளும் பொருட்டு ஞாயிற்றுக்கிழமை கல்லடி சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மண்டபத்தில் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. (05)

# சட்ட விரோத மீன்பிடி உள்ளிட்ட செயற்பாடுகளால் வாழ்வாதாரமிழக்கும் தென்னமரவடி கிராம மக்கள்



தென்னமரவடி களப்பு பகுதியில் வெளி இடங்களில் இருந்து-வரும் மீனவர்கள் சட்ட விரோதமான முறையில் மீன்பிடிப்பதால் தமது வளம் சுரண்டப்படுவதோடு வாழ்வாதாரமும்பாதிக்கப்படுவதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்னமரவடி கிராமத்தில் வாழும்மக்கள்மீன்பிடித்தொழிலை தமது வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றார்கள். பெரும்பாலான மக்கள் சிறு கடல் பகுதியான களப்பு பகுதியில் இறால், நண்டுமற்றும்மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதில் பெருமளவு பெண்கள் படகுகள், வள்ளங்கள் இல்லாத நிலையில் நீந்திச் சென்று கைகளால் நண்டுகள், இறால்களை பிடித்து தமது நாளாந்த செலவுகளை ஈடுசெய்து வருகின்றார்கள். இந்நிலையில், வெளி இடங்களில் இருந்து இயந்திரப் படகுகளில் வருகின்ற மீனவர்கள் தமது இடங்களில் வாடிகளைஅமைத்துசட்டவிரோதமான வலைகளை பயன்படுத்தியும், கூடுகளை கட்டி யும் மீன் பிடித்து வருகின்றனர்.

இதனால் கடல்வளம் அழிக்கப்படுவதோடு தமக் கான கடல்வளத்தை தமது வாழ்வாதாரத்துக்காக பயன்படுத்த முடியாதசூழல்ஏற்பட்டுள்ளதாகவும், அதனைத் தட்டிக் கேட்டால், தமது வலைகள் மற்றும் படகுகளை சேதப்படுத்துவதுடன்தங்களையும் தாக்குவதாகவும் அப்பகுதி மீனவர்கள் கவலையோடு கூறுகின்றனர். (05)

# புதுப்பொலிவுடன் பொதுமக்களுக்கு ஹற்றன் பஸ் தரிப்பிடம் கையளிப்பு

ஹற்றன் பஸ் தரிப்பிடம் நவீன வசதிகளுடன்கூடிய பஸ் தரிப்பிடமாக புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில்நாடாளுமன்றஉறுப்பினர் மருதபாண்டிராமேஸ்வரன், அமைச்சர்ஜீவன் தொண்டமானின் இணைப்புச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த ஹற்றன் பஸ் தரிப்பிடம் சேதமடைந்து காணப்பட்ட நிலையில், மழைக்காலங்களில் பஸ் தரிப்பிடத்தில் நீர் தேங்கி இருப்பதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களையும் எதிர் நோக்கியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த பஸ்தரிப்பிடத்தை புனரமைத்துத் தருமாறு மக்கள், சாரதிகள், நடத்துநர்கள் உள்ளிட்டோர் கோரிக்கை முன்வைத்து வந்த நிலையிலேயே, இது புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2023இல் வெளியிடப்பெற்றது.